மத்தியசிறை கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணைகள்.
முன்னிலை - திரு.க.சண்முகசுந்தரம், எம்.ஏ.,

எண். 10106/பொ.1/2009 நாள். 05.08.2011..
திருவள்ளுவராண்டு - 2042, ஆடி திங்கள் 20ம் நாள்.

பொருள் - சிறைத்துறை - மத்தியசிறை, கடலூர் - தட்டச்சர் பதவியில் தமிழ்நாடு தேர்வாணையம் தொகுதி IV போட்டித் தேர்வு 2006-2007 மூலம் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்ட தட்டச்சருக்கு பணிவரன்முறை செய்து ஆணையிடுதல்.

பார்வை - 1) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை கடித எண். 4302/PSD-A/2009, நாள்.16.07.2009.
2) சிறைத்துறை தலைமை இயக்குநர் குறிப்பாணை எண்.27065/இஎஸ்.1/2009 நாள். 27.07.2009.
3) கண்காணிப்பாளர், மத்தியசிறை, கடலூர் செயல்முறை ஆணை எண். 10106/பொ.1/2009 நாள் 30.07.2009

---

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV 2006-2007-ல் தேர்வு செய்யப்பட்டு, பார்வை 2 மற்றும் 3-ல் காணும் ஆணைகளின்படி கடலூர் மத்தியசிறையில் தற்காலிக தட்டச்சராக பணி நியமனம் செய்யப்பட்ட, செல்வி.வி.லட்சுமி என்பவர் 30.07.2009 முற்பகல் கடலூர் மத்திய சிறையில் பணியில் சேர்ந்துள்ளார். இவரது கல்வி தகுதி சான்றுகள் மற்றும் தொழில்நுட்ப சான்றுகள் ஆகியவற்றின் உண்மை தன்மை அறிக்கை பெறப்பட்டதை தொடர்ந்து இவரது பணியினை தட்டச்சர் பதவியில் வரன்முறை செய்து ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும்.

எனவே பார்வை 1-ல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடிதத்தின்படி தேர்வு செய்யப்பட்ட செல்வி.வி.லட்சுமி என்பவரது பணியினை தட்டச்சர் பதவியில், சென்னை உயர்நீதிமன்றத்தில் ஏற்கனவே தொடரப்பட்டுள்ள ரிட் மனுவின் மீது சென்னை உயர்நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்படும் ஆணைக்குட்படுத்தி (Subject to out come of the writ petitions pending before the Hon'ble High Court. Madras ) இவர் பணியில் சேர்ந்த நாளான 30.07.2009 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

...2.

செல்வி.வி.லட்சுமி, மத்தியசிறை, கடலூர் என்பவரை இவரது பணி வரன்முறை செய்யப்பட்ட நாளான 30.07.2009 முதல் மூன்றாண்டு கால தொடர் பணிக் காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது. இவர் தனது தகுதி காண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் (Tamil Nadu Government Office Manual) தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். மேலும் Computer on Office Automation Course முடித்து அதன் தேர்ச்சி பெற வேண்டும்.

மேற்கண்ட பதிவுகள் யாவும் இவரது பணிப்பதிவேட்டில் பதியப்பட்டது எனவும் சான்றளிக்கப்படுகிறது.

(ஒம்)

சிறைக் கண்காணிப்பாளர்,
மத்தியசிறை, கடலூர்-4.

பெறுநர்
செல்வி.விலட்சுமி, தட்டச்சர், மத்தியசிறை, கடலூர்.

நகல்- கூடுதல் காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறை தலைவர், சென்னை.8
- தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
நகல்- சிறைத்துறை துணைத்தலைவர், திருச்சி சரகம், திருச்சி.
- தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
நகல்- நேர்முக உதவியாளர் / அலுவலக மேலாளர், மத்தியசிறை, கடலூர்.
நகல்- பணிப்பதிவேடு / கண்காணிப்பாளர் ஆணைப் புத்தகம் / மேல் இருப்புக் கோப்பு.